# மனிதகுல மேம்பாடு

**Que 1: பாரத சமுதாயம் என்ற கவிதை காட்டும் ஒற்றுமையைக் குறிப்பிடுக.**

**(குறிப்பு-மனிதர் நோக மனிதர் பறிக்கும் வாழ்க்கை-இனிய பொழில்கள்-நெடிய வயல்கள்-கனி கிழங்கு தானியங்கள்)** ***Marks :(5)***

**Ans:** கருத்து - மொழிவெளியீட்டுத்திறன் – மொழிநடை

**Que 2: தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என வீரமுழக்கமிட்டவர்.** ***Marks :(1)***

**அ) பாரதிதாசன்** **ஆ) கண்ணதாசன்**

**இ) முடியரசன்** **ஈ)பாரதியார்**

**Ans:** ஈ)பாரதியார்

**Que 3: "தீபங்களே**

**நீங்கள்**

**தெரிந்து கொள்ளுங்கள்**

**திரிகள் மட்டுமே**

**கருகிக் கொண்டிருக்கின்றன**

**தூண்டுகோல்கள்**

**சுகமாகத் தூங்குகின்றன."**

**- இக்கவிதை உணர்த்தும் மனித நேயப் பிரச்சினைகளை விவாதித்துக் குறிப்பு எழுதுக.** ***Marks :(5)***

**Ans:** கருத்து - மொழிவெளியீட்டுத்திறன் – மொழிநடை

**Que 4: இன்று மக்களிடையே மனித நேய உணர்வுகள் குறைந்து வருகிறது விவாதக் குறிப்பு தயாரிக்க.** ***Marks :(6)***

**Ans:** விவாதக் குறிப்பு – வடிவம்

**Que 5: வளையாபதி என்ற நூல் ----வகையைச் சார்ந்தது.**

**அ) சிற்றிலக்கியம்** **ஆ)காப்பியம்|**

**இ) எட்டுத்தொகை** **ஈ) பக்தி இலக்கியம்** ***Marks :(1)***

**Ans:** ஆ) காப்பியம்|

**Que 6: அன்பின் விதைகள் கதையாசிரியருக்கு கதையின் சிறப்பினைப் பாராட்டி பாராட்டுக் கடிதம் எழுதுக.** ***Marks :(5)***

**Ans:** கருத்துகள்—வடிவம் – மோழிநடை

**Que 7: சிந்தனை ஒன்றுடையாள் என்ற கட்டுரையின் அடிப்படையில்" மனிதகுல மேம்பாடு -மனிதநேயமும் மன ஒற்றுமையும் "என்ற தலைப்பில் சொற்பொழிவு தயாரிக்க.**
**(குறிப்பு—சாதிப் பாகுபாடு-சமதர்மச்சிந்தனை-சாதி ஒருமை-சமய ஒருமை)** ***Marks :(6)***

**Ans:** கருத்துகள் - மொழிவெளியீட்டுத்திறன் - மொழிநடை - வடிவம்

**Que 8: மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்க மினியுண்டோ----- பாரதியார் எழுதிய பாரத சமுதாயம் என்ற கவிதையை இன்றைய வாழ்க்கை முறையுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுக.** ***Marks :(5)***

**Ans:** கருத்து - ஒப்பீட்டுத்திறன் – மொழிநடை

**Que 9: அன்பின் விதை கதையில் வரும் பூமிநாதனின் பாத்திரப்படைப்பு குறித்து எழுதுக.** ***Marks :(5)***

**Ans:** கருத்து - மொழிவெளியீட்டுத்திறன் – மொழிநடை

**Que 10: தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்று வாழ்பவர்களின் உள்ளத்திற்கு**

**உவமையாகப் பாவேந்தர் கூறுவது**

**அ) துவரை உள்ளம்** **ஆ)பரந்த உள்ளம்**

**இ)பிஞ்சு உள்ளம்** **ஈ)கடுகு உள்ளம்** ***Marks :(1)***

**Ans:** ஈ)கடுகு உள்ளம்

**Que 11: அரவான் என்ற நாடக நூலுக்கு விருது வெற்றவர்**

**அ) எஸ் இராமகிருஷ்ணன்** **ஆ) எம். சாலன்**

**இ) மு.பி.பாலசுப்பிரமணியன்** **ஈ) இளம்பிறை மணிமாரன்**
***Marks :(1)***

**Ans:** அ) எஸ் இராமகிருஷ்ணன்

**Que 12: கீழ் வரும் பாடலுக்கான விமர்சனக் குறிப்பு எழுதுக.**

**"இனியொரு விதி செய்வோம்-அதை**

**எந்த நாளும் காப்போம்**

**தனியொருவருக்கு உணவில்லை எனில்**

**ஜகத்தினை யழித்திடுவோம்-வாழ்க."** ***Marks :(5)***

**Ans:** கருத்துகள்- விமர்சனம் – மொழிநடை

**Que 13: கீழ் வரும் பாடல்களைப் படித்து பட்டுக்கோட்டைப் பாடல்களில் மனிதம் என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்பு தயாரிக்க.**

**"மனிதரை மனிதர் சரி நிகர் சமமாய்**

**மதிப்பது நம் கடமை**

**வள்ளுவப் பெருமான் சொல்லிய வழியில்**

**வாழ்வது அறிவுடைமை**

**அண்ணன் தம்பியாய் அனைவரும் வாழ்ந்த**

**அருள் விளக் கேற்றிடுவோம்.**

**வாழை நிலைக்குது சோலை தழைக்குது**

**ஏழைகளுக்கிதில் என்ன கிடைக்குது**

**கூழைக் குடிக்குது, நாளைக் கழிக்குது**

**ஒலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது."** ***Marks :(4)***

**Ans:** கருத்து - வெளியீட்டுத் திறன் – கருத்து

**Que 14: "அறிவை விரிவு செய் அகண்டமாக்கு**

**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை**

**அணைந்து கொள் உன்னைச் சங்கமமாக்கு**

**மானிட சமுத்திரம் தான் என்று கூவு "**

**இப்பாடல் குறிப்பிடும் மனிதநேயக் கருத்துகளை விளக்கிக் குறிப்பு எழுதுக.** ***Marks :(3)***

**Ans:** கருத்துகள்—வடிவம்

**Que 15: அன்பின் விதைகள் என்ற கதையின் ஆசிரியரான எஸ் .இராமகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**
***Marks :(5)***

**Ans:** கருத்துகள்—வடிவம்

**Que 16: யாதும் ஊரே யாவருங் கேளிர்-எனப் பாடியவர்**

**அ) கபிலர்** **ஆ) கணியன் பூங்குன்றனார்**

**இ) கணிமேதாவியார்** **ஈ) மாங்குடி மருதனார்**
***Marks :(1)***

**Ans:** ஆ) கணியன் பூங்குன்றனார்

**Que 17: உங்கள் பள்ளிக்கு வருகை தர உள்ள சமூக முன்னேற்றப் போராளியுடன் மனிதநேயம் பற்றி நேர்காணல் நடத்துவதற்கான வினா நிரல் தயார் செய்க.** ***Marks :(5)***

**Ans:** தலைப்புத் தொடர்பான வினாக்கள் – மொழிநடை

**Que 18: கீழ் வரும் பாடல் வரிகளை நயம் பாராட்டி எழுதுக.**

**ஏழைகளுக்கிதில் என்ன கிடைக்குது ?**

**கூழைக் குடிக்குது நாளைக் கழிக்குது**

**ஓலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது"** ***Marks :(5)***

**Ans:** எதுகை நயம் - மோனை நயம் - சொல் நயம் - ஓசை நயம் - கருத்து.

**Que 19: அக்டோபர் - 2 அன்று உங்கள் பள்ளியில் " தேசிய முன்னேற்றமும் மன ஒற்றுமையும் "என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெற உள்ளது இதற்கான உரைக்குறிப்பு தயார் செய்க.** ***Marks :(6)***

**Ans:** கருத்துகள்- வெளியீட்டுத் திறன் - மொழிநடை – வடிவம்

**Que 20: "எவர் உடம்பிற்கும் சிவப்பே ரத்த நிறமப்பா**

**எவர் விழிநீர்க்கும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா**

**பிறப்பினால் எவர்க்கும் பெருமை வராதப்பா**

**சிறப்பு வேண்டுமெனில் நல்ல செயல் வேண்டுமப்பா"**

**- விமர்சனக் குறிப்பு எழுதுக** ***Marks :(5)***

**Ans:** கருத்து - விமர்சனம் – மொழிநடை

**Que 21: " சமதர்மச் சிந்தனை" என்னும் தலைப்பில் பள்ளி மலரில் வெளியிடும் பொருட்டு கட்டுரை தயார் செய்க.** ***Marks :(8)***

**Ans:** கருத்துகள்- வெளியீட்டுத்திறன் - மொழிநடை .

**Que 22: முத்தமிழ் காப்பியம் , நாடகக் காப்பியம் என அழைக்கப்படும் நூல்**

**அ) மணிமேகலை** **ஆ) சிலப்பதிகாரம்**

**இ) வளையாபதி** **ஈ) சீவகசிந்தாமணி** ***Marks :(1)***

**Ans:** ஆ) சிலப்பதிகாரம்

**Que 23: "தன் துயர் களைந்து பிறர் துயர் போக்குவதே மனித வாழ்வின் மகத்தான வாழ்வு "**

**- இக் கூற்றை விமர்சனம் செய்க.** ***Marks :(5)***

**Ans:** கருத்து - விமர்சனம் – மொழிநடை

**Que 24: அக்டோபர் - 30 சேமிப்பு தினமாகக்கொண்டாடப் படுகிறது இந்நாளில் உங்கள் பள்ளியில் " சேமிப்புப் பழக்கம் வளர்த்தல் " என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற உள்ளது இதில் பங்கேற்கக் கட்டுரை தயார் செய்க.** ***Marks :(8)***

**Ans:** கருத்துகள்- வெளியீட்டுத்திறன் - மொழிநடை .

**Que 25: இளம் வயதிலிருந்தே சேமிக்கும் பழக்கத்தை வளர்க்கும் நோக்கத்தினை வலியுறுத்தி" பிறருக்கு பயன்படுவதற்காகச் சேமிக்கும் பணமே உண்மையான பணம்" என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான குறிப்புகள் தயார் செய்க.** ***Marks :(6)***

**Ans:** கருத்துகள் - வெளியீட்டுத் திறன் - மொழிநடை - வடிவம்